**இலங்கை நிர்வாக சேவையில் வெற்றிடமாகவுள்ள பிரதேச செயலாளர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரல்**

பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கீழ், தற்போது வெற்றிடமாகவுள்ள மற்றும் வெற்றிடமாகவுள்ள இலங்கை நிர்வாக சேவையின் தரம் I இற்கான கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச செயலாளர் பதவிகள் உள்ளன. மேற்படி பதவிகளுக்கு இலங்கை நிர்வாக சேவையின் தரம் I மற்றும் தரம் II அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு, அந்தப் பதவிகளுக்கு பொருத்தமான அலுவலர்கள் நியமிக்கப்பட எதிர்பார்க்கப்படுகின்றது.

02. இதன்படி, பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளரது PSC/APP/21/5/1/2024 இலக்க 2024.08.12 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் வழங்கப்பட்ட அனுமதியின் பிரகாரம், 2016 இற்கு முன்னர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட இலங்கை நிர்வாக சேவையின் தரம் I மற்றும் II அலுவலர்கள் வெற்றிடமாகவுள்ள பின்வரும் பிரதேச செயலாளர் பதவிகளுக்கு நியமனம் பெற எதிர்பார்ப்பதாயின், அவ்வாறு விரும்புகின்ற பிரதேச செயலாளர் பதவியை அல்லது பதவிகளை முன்னுரிமையளித்து குறிப்பிட்டு, தற்போதைய பதவியிலிருந்து விடுவிக்கப்படுவதற்கான இணக்கப்பாட்டுடன் திணைக்களத்தலைவர் மூலம் இணைப்பு 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கமைய முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவத்தினை 2025.08.15 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

| **இலக்கம்** | **மாவட்டம்** | **தற்போது வெற்றிடமாகவுள்ள மற்றும் வெற்றிடமாகவுள்ள பிரதேச செயலகங்கள்** |
|---|---|---|
| 1 | அம்பாறை | உஹன |
| 2 | கம்பஹா | ஜா எல |
| 3 | மொனராகலை | தனமல்வில |
| 4 | நுவரெலியா | நோர்வூட் |
| 5 | புத்தளம் | கற்பிட்டி |
| 6 | | மஹகும்புக்கடவல |
| 7 | | புத்தளம் |
| 8 | திருகோணமலை | பதவிசிறிபுர |
| 9 | | சேருவில |
| 10 | | தம்பலகமுவ |

செயலாளர்,
பொது நிருவாக மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு,
"நிலமெதுர"
எல்விடிகல மாவத்தை,
கொழும்பு 05.

2025.07.30